
# தொண்டன்


ஆரம்பம்: பெப்ரவரி 1969



அறிவைப் பெருக்கி உறவை வளர்த்து
அனைத்தையும் ஆளும் சாதனங்கள்
ஆக்கத்திற்கே பயன்படுமானால்
அவனியெலாமே நலம் பெறுமே!

மே - 1998 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




● ஏப்ரல் மாதத் தொண்டன் அழகு

ஏப்ரல் மாதத் தொண்டன் மாத இறுதியில் கிடைத்தாலும் அழகாக இருக்கிறது. நேர்த்தியான அச்சமைப்பு. முன்பக்க அட்டை ஓவியம் நன்றாக அமைந்துள்ளது. ஓவியருக்கு ஒரு சபாஷ்.

ஜோர்ஜ் மரியதாஸ்
மட்டக்களப்பு.

● கவலையைத் தருகிறது

தொண்டன் ஒவ்வொரு மாதமும் தாமதமாகவே வருவது கவலையைத்தருகிறது. மாத ஆரம்பத்திலேயே வெளிவர நடவடிக்கை எடுக்கக் கூடாதா? போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமிருந்தும் தாமதமாவதால் பங்கு பற்ற முடியவில்லை.

மேரிபுஸ்பம்
கொழும்பு - 13

● இரைச்சல் கேட்கிறது

ஒவ்வொரு தொண்டன் இதழிலும் அட்டையின் பின் பக்கத்தில் 'காற்றில் கலந்து வரும்' என்னும் தலைப்பில் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகளின் நேர அட்டவணையைத் தருகின்றீர்கள். நல்ல முயற்சி தான். ஆனால் அந்த நேரங்களுக்கு வானொலியைத் திறந்தால் இரைச்சல்தான் கேட்கிறது. நிகழ்ச்சியைக் கேட்க முடியவில்லை.

அன்றூ செபஸ்தியான்பிள்ளை
மட்டக்களப்பு.

● எதிர்பார்ப்பு

தென்னாபிரிக்க பயணக் கட்டுரை நல்ல ஆரம்பம் S. A. இருதயநாதன் அவர்களிடமிருந்து நிறையவே எதிர்பார்க்கின்றோம்.

மைக்கல் ராஜ்
திருகோணமலை.

● கையடக்கம் - வாயடக்கம்

தொண்டனில் முன்பெல்லாம் அரசியல் விடயங்கள் காரசாரமாகவே 'எதிரொலியில் இடம்பெறும். இப்போதெல்லாம் காணோமே' வாயாடி வண்டுமணிக்கும் வாயடங்கிப் போய்விட்டதா?

மனுவல் பாத்திமாமேரி
வெள்ளவத்தை.

● ஏமாற்றாதீர்

தொண்டனில் தொடர்கதையோடு சிறுகதையையும் அவ்வப்போது சேர்த்துக்கொள்ளுங்கள் தொண்டனில் சிறுகதையைக் காணாது என்னைப் போன்ற வாசகர்கள் பெரிதும் ஏமாற்றமடைகிறார்கள்.

சுலோசனா பிரான்சிஸ்
வவுனியா.

● பயனுள்ள முயற்சி

'திருச்சபைச் செய்திகள்' மூலம் உலகத் திருச்சபை தொடர்பான பல தகவல்களைத் தொகுத்துத் தருவது பல நாடுகளிலும் நடைபெறும் திருச்சபையின் நடவடிக்கைகளை அறிந்து கொள்ள உதவியாக இருக்கிறது. பாராட்டுக்கள்.

அருள்ஜோதி பெர்னான்டோ
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மே - 1998

மலர்: 30 இதழ்: 04

ஆசிரியர்:
A. தேவதாசன்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:

S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு:

சமூகத் தொடர்பு நிலையம்,
திரு / மட். மறை மாவட்டம்.


முகவரி:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX 44,
BATTICALOA. 30000
Tel: 065 - 22723

விலை; 10/-

ஆண்டுச் சந்தா: 120/-
(தபாற்செலவு உட்பட)



உள்ளே.........

| | | |
|---|---|---|
| 1. | இதயந்திறந்து | 02 |
| 2. | தூய ஆவியினால் ஊட் | 03 |
| 3. | இரட்சணியயாத்திரிகம் | 04 |
| 4. | வாழ்வோம் மடியும் வரை | 06 |
| 5. | புண்ணிய பூமி | 07 |
| 6. | ம(னி)தம் | 08 |
| 7. | திருச்சபைச் செய்திகள் | 10 |
| 8. | பொன் விழாக் காணும் | 12 |
| 9. | புனித நாட்டுப் ப்யணம் | 13 |
| 10. | மன்னிக்கும் மாமனிதர் | 15 |
| 11. | சுவடுகள் | 16 |
| 12. | நல்லதொரு தலைமை | 17 |
| 13. | கறுத்த மனிதர் | 19 |
| 14. | தொடர்பூடங்கள் வழி | 21 |
| 15. | விவிலிய - பொது அறிவு | 23 |
| 16. | போட்டி முடிவுகள் | 24 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயந்திறந்து......

போதித்தார்
கற்பித்தார்
அருங் குறிகள் செய்தார்
அற்புதங்கள் செய்தார் யேசு.
யேசுவின் மூன்று வருடப் பணியில்
முக்கியமாக அமைந்தது போதனையே.
நற்செய்தி சொன்னார்
நற்செய்தியை சொல்லச் சொன்னார்
நற்செய்தி உலகெங்கும்
பரவ வேண்டும் என ஆவல் கொண்டார் யேசு.
இந்த நற்செய்தி
உலகோர் உள்ளத்தில் விழுந்தால்
எத்தனையோ உளமாற்றங்கள் ஏற்படும்
உளமாற்றங்கள் ஏற்பட்டால்
உலகமே சொர்க்கம் ஆகிவிடும்.
இறை குலமே நீ
வார்த்தைகள் இல்லாமல் வாடி நிற்பதென்ன!
நற்செய்தி இல்லாமல் நலிந்து நிற்பதென்ன!
தூதுரை இல்லாமல் துவண்டு நிற்பதென்ன!
நீ வாழவேண்டும் என்பதற்காக
வாழ்வளிக்கும் வார்த்தையைத் தந்தார்
நீ வல்லமை பெறவேண்டும் என்பதற்காக
வல்லமை நிறைந்த வார்த்தையைத் தந்தார்
வைகாசி பிறந்தாச்சு
மாதாவின் வணக்க மாதம் பிறந்தாச்சு
மாதா மகிமை பெற்றதும்
வார்த்தையினாலே தான்.
ஆண்டவர் வார்த்தையை அனுப்பினார்,
அவ்வார்த்தையை ஏற்றுக்கொண்டார் மரியாள்.
அவ்வார்த்தைக்கு தாம் அடிமையென்றார்
வார்த்தையால் மரியாள் உயர்ந்தாள்.
நீ வாழ்வு பெற வேண்டுமானால்
நற்செய்தியை அறி
விவிலியத்தை எடுத்துப்படி
அதன்படி வாழ்
வார்த்தையை வாசிக்காமல்
படுக்கைக்கு போகாதே.

- ஆசிரியர்




தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடை எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். (தி. ப. 1 : 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# தூய ஆவியினால் ஊட்டம் பெற்று நம்பிக்கையைப் பரப்புவோம்

## 32 வது உலகத்தொடர்பு நாளையொட்டி (24 - 04 - 98) திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் வழங்கியுள்ள செய்தியின் சாரம்

தூய ஆவியானவர் 'மனித இதயத்தில் எழும் நம்பிக்கையின் காவலர் எனப்படுகிறார்' இதன் காரணமாகவே 32வது உலகத் தொடர்பு நாளுக்கான தொனிப் பொருளாக 'தூய ஆவியினால் ஊட்டம் பெற்று நம்பிக்கையைப் பரப்புவோம்' என்னும் வாக்கியத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம் அவர் தருகின்ற 'நம்பிக்கை' எனும் கொடையானது நமது மறுவாழ்வு பற்றிய கொள்கைகளுடன் தொடர்புடையது. இந்த நம்பிக்கை அனைத்துக்கும் அடிப்படையானது.

வரவிருக்கும் வாழ்வு பற்றிய நம்து விசுவாசமானது நிறைவாழ்வோடு தொடர்புடையது. அனைத்து மக்களுடனும் நாம் கொள்ள வேண்டிய உறவுக்கு தூண்டுதலாகவும் உள்ளது. இந்த நம்பிக்கை தெய்வீக மனித உறவுகளை சீர்படுத்துவதாகவும் உள்ளது. இதன் காரணமாகவே இருபத்தோராம் நூற்றாண்டின் விடியலுக்காக நம்மை ஆயத்தம் செய்வது முக்கியத்துவம் பெறுகிறது. இன்றைய உலகில் காணப்படும் மனித மேம்பாட்டுக்கான அடையாளங்களும் இந்த நம்பிக்கையைத் தூண்ட வேண்டும்.


திருச்சபையிலும் நம்பிக்கைக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அவை நமது ஆன்மீக வாழ்வை வளப்படுத்துவதோடு சகல மட்டத்திலுமான உறவுக்கு உரையாடல்களுக்கும் நம்மை இட்டுச் செல்ல வேண்டும்

செபத்தில் வேரூன்றிய கிறீஸ்தவத் தொடர்பாளர்களே நம்பிக்கையைப் பரப்பலாம். தொடர்பு சாதனங்களூடாக தொடர்பு கொள்வதென்பது பிறரைப் பயன்படுத்துவது அல்ல, மனிதர்களை நுகர்வுப்பொருளாகக் கருதி அணுகுவது அவர்களை நாசஞ்செய்வதாகும். தொடர்பு சாதனங்களின் பணி மக்களை நெருங்க வைத்து, அவர்களது வாழ்வை வளப்படுத்துவதாகும். சமூகத் தொடர்பு சாதனங்கள் முறையாகப் பயன்படுத்தப் பட்டால்தான் அவை நம்பிக்கையின் அறிகுறிகளாக விளங்கும்.

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்சணிய யாத்திரிகம் - ஓர் இனிய காவியம்



★ கவிஞர் வாகரை வாணன்

**19ம்** நூற்றாண்டில் வாழ்ந்து, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் ஒப்பிலா நூலைப் படைத்து, தமிழ் மொழிக்கு பெருமை தேடித்தந்த ஐரோப்பிய தமிழ் அறிஞர் கால்டுவெல் காலத்தைச்சேர்ந்தவர், கிறிஸ்தவக் கம்பர் என்றும், வீரமாமுனிவரின் வாரிசு என்றும் சிறப்பிக்கப்படும் கிருஸ்ண பிள்ளை அவர்கள்.

இந்து வைணவ சமயத்தவரான கிருஸ்ண பிள்ளை அவர்கள் இருபத்தொன்பது வயதினராக இருக்கும் போதே John Bunyan *(1628 - 1688)* என்பவரால் இயற்றப்பட்ட Pilgrims Progress என்னும் ஆங்கில நூலின் தமிழ்ப் பெயர்ப்பினை வாசிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். அந்நூல் அவர் மனத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதன் விளைவுதான் இரட்சணிய யாத்திரிகம் என்னும் இனிய தமிழ்க் காப்பியமாகும். தம் வாழ்வின் நடுப்பகுதியில் இக் காவியத்தை எழுதத் தொடங்கிய கிறிஸ் தவக் கம்பர் அதனை நிறைவு செய்திட பதினான்கு ஆண்டுகளை எடுத்துக் கொண்டதாக அறிகின்றோம்.

ஐந்து பருவங்களும் 47 படலங்களும் அமையப் பெற்ற இக்காவியத்தில் ஏறக்குறைய 3800 இனிய பாடல்கள் உள்ளன. கத்தோலிக்கக் கிறிஸ்தவ இலக்கியத் துறையில் வீரமாமுனிவரின் தேம்பாவணிக்குப் பின் எழுந்த இக்கிறிஸ்தவக் காப்பியத்தின் ஆசிரியரான கிருஸ்ண பிள்ளை, பழந்தமிழ் இலக்கியங்களில் பெரிதும் பயிற்சி உடையவர் என்பதை அவரது காவியத்தைக் கற்பவர்கள் அறிந்து கொள்வர்

கவிச்சக்கரவர்த்தி கம்பர், வீரமாமுனிவர் போல், கிருஸ்ணபிள்ளை அவர்களும் தம் முன் தோன்றிய தமிழ் இலக்கியங்களான கம்பராமாயணம், பெரியபுராணம், கலிங்கத்துப்பரணி, ஆழ்வார் பாசுரங்கள் முதலான வற்றைத் தமது காவியத்தில் கையாளத் தவறவில்லை. இதனை 'கம்பராமாயணச் செய்யுள் நடையையும் அதன் போக்கையும் அனுசரித்தே இயன்ற மாத்திரம் அமைக்கப் பட்டது' என்னும் கவிஞரின் வாக்குமூலமே நன்கு உறுதி செய்யும்.

இரட்ணிய யாத்திரிகத்தின் மூலமான Pilgrims Progress என்னும் நூலின் கதா நாயகன் கிறிஸ்தியானின் ஆன்மீகப் பயணத்தோடு தமது சொந்த வாழ்க்கைப் பயணத்தையும் இணைத்தே காவியத்தை இனிது படைத்திருக்கிறார் ஆசிரியர் என்பதனை காவியத்தின் அவையடக்கப் பாடலே நமக்கு உணர்த்தும்.

மூலநூலை ஒட்டிக்காவியம் செய்யும் கவிஞர் பெருமக்கள் அந்நூலில் இருந்து வேறுபட்டுத் தம் காவியத்தை நடத்திச் செல்லல் இயல்பு. காட்டாக கம்பராமாயணத்தையே நாம் கொள்ளலாம். கம்பனில் நன்கு தோய்ந்தெழுந்த கவிஞர் கிருஸ்ண பிள்ளை, மூலநூலில் இருந்து சில இடங்களில் வேறுபடவே செய்கின்றார். உதாரணத்திற்கு ஒரு பகுதியை இங்கு ஊன்றிக் கவனிப்போம

ஆன்மீக நெடும்பயணத்தில் ஈடுபடும் கிறித்தியான் ஒரு சந்தர்ப்பத்தில் தவறான பாதையில் சென்று விடுகின்றான். அப்போது அவனைத் தடுத்து நிறுத்தி சரியான வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நற்செய்தியாளன் ஒருவன் ஆற்றுப் படுத்துகிறான், இச்சூழலை இனிது விளக்கிட கிறிஸ்தவக்கம்பர் கலிங்கத்துப் பரணியின் பாணியில் கடை திறப்புப்படலம் என்று ஒரு படலத்தையே அமைத்துவிடுகின்றார். இது போன்றே இந்திய வடபுலத்தில் பிறந்து வளர்ந்த வால்மீகியின் இராமனை கம்பன் தமிழ் மரபுக்கேற்ப சில இடங்களில் மாற்றித் தந்தது போல கிறிஸ்தவக் கம்பர் கிருஸ்ண பிள்ளையும் தமது காவிய நாயகன் கிறிஸ்தியானை ஒரு தமிழ் மகனாகவே நம் கண் முன் காட்டுகிறார்.

கிருஸ்ணபிள்ளை அவர்கள் தமது இள வயதுக்குப் பின் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ்ந்த போதும் ஒரு வகையில் பெருங் காயம் இருந்த பாண்டமாகவே விளங்குகின்றார் என்பதனை அவரது காவியத்திலேயே நாம் காணலாம். எடுத்துக்காட்டாக விண்ணகத்தைக் கவிஞர் வருணிக்கும் பாங்கு இந்து சமய புராணங்களில் காணப்படும் தேவலோகக் காட்சியை நமக்கு நினைவு படுத்துகின்றன. கவிஞரின் இவ் ஈடுபாடு ஜீவகங்கையையும் கற்பகதருவையும் அவர் கவிதையில் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

கத்தோலிக்கக் கிறிஸ்தவ இறையியலோடு இந்து சமயத்தின் இருபெரும் சிந்தனைக் கருவூலங்களான சைவசித்தாந்தம், வேதாந்தம் ஆகியவற்றை இணைத்துப் பார்க்கும் போக்கு ஐரோப்பியக் கிறிஸ்தவத்துறவியான தத்துவபோதகர் என்னும் De Nobili அவர்களுடன் ஆரம்பமாகிவிட்டதெனலாம்.

இவ் வாய்வுத்துறையில் கிருஸ்ணபிள்ளைக்கு காலத்தால் முந்தியவரான வேதநாயக சாஸ்திரியார் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதற்கு அவரின் கிறிஸ்தவக் கீர்த்தனைகள் எனும் பாடல் திரட்டே சான்றுபகரும்.

சாஸ்திரியார் அவர்களைப் போன்று பிறவியிலேயே இந்துவான கிருஸ்ணப்பிள்ளை அவர்களும் கிறிஸ்தவத்தின் திரித்துவக் கோட்பாட்டோடு சைவ சித்தாந்த சச்சிதானந்த நிலையை இணைத்துப் பேசுகின்றார். இதனை

> ''சத்தாகிச் சித்துமாகித் தணப்பிலா
> னந்தமாகி நித்தியந் திகழ்ந்து நிற்கு
> நிருமல் திரியேகத்தின்''

எனும் பாடல் வரிகளே எடுத்துச் சொல்லும். இது போன்றே இறைவனை சச்சிதானந்த வேந்தன் என்றும் விண்ணுலகை சச்சிதானந்தபுரி என்றும் கவிஞர் சாற்றிப்போற்றுவார்.

இவ்வாறு ஆங்கிலநூல் ஒன்றை அத்திபாரமாகக் கொண்டு தாம் படைத்த காவியத்தில், தமிழ் மரபும் இந்து சமயச் சிந்தனைகளும் இழைந்தோட கிறிஸ்தவ இரட்சணியத்தின் தேடலை, மாண்பை ஒரு நல்ல கிறிஸ்தவனாகவே நின்று நமது சிந்தனைக்கு விருந்தாக்குகின்றார், கிறிஸ்தவக் கம்பர் கிருஸ்ணபிள்ளை அவர்கள்.

இது நமக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தருவதன்றோ!

---

(3ம் பக்கத் தொடர்)

தொடர்புச் சாதனங்கள் உண்மைத் தகவல்களையும், ஆக்க பூர்வமான கருத்துக்களையும் வழங்குவதோடு நிறைவான விழுமியங்களைப் பரிமாறுவதன் மூலம் நல்லதொரு சமூகத்தை உருவாக்கலாம். திருச்சபையின் கண்ணோட்டத்தில் நற்செய்தியைப் பரப்புவதுமட்டும் போதாது. தொடர்புச்சாதனங்கள் உருவாக்கியுள்ள புதிய பண்பாட்டுடன் நற்செய்தி இரண்டறக் கலக்க வேண்டும் இதற்கு கிறிஸ்தவத் தொடர்பாளர்களுக்கு ஆழ அகலமான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ஆவியானவரின் உணர்வைப் பிரதிபலிக்கும் ஆன்மீக வாழ்வில் இவர்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆவியினால் நிரப்பப்பெற்று செபத்தில் நிலைத்திருப்போரே கிறிஸ்தவத் தொடர்பாளர்களாகக் கடமையாற்ற முடியும்.

நம்பிக்கையின் நிறைவான அடையாளம் கன்னி மரியாள். இறைவனின் குரலுக்குத் தம்மை அர்ப்பணிக்கும் அனைவருக்கும் அவர் ஒரு முன் மாதிரிகையாவார் இவரது உறுதியான நம்பிக்கையை கிறிஸ்தவத் தொடர்பாளர்கள் தம்மிலும் பிறரிலும் தூண்ட வேண்டும். மாபெரும் ஜூபிலி ஆண்டை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் நாம் நமது சிந்தனையை அன்னை மரியாள் பால் திருப்புவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வோம் மடியும்வரை

● ஆர். எஸ். செல்வரெத்தினம்

வெண் புறாக்கள்
விடுமுறையில் சென்றுவிட
''கண்டுபிடிப்புக்கள் - சில
கொன்று குவிப்புக்களுக்கே
என்று
மார்தட்டிச் சொல்லும்
அலுமினியக் கழுகுகள்
நீலவானை ஆக்கிரமிக்கின்றன!
குண்டுக் குழந்தைகளை
ஈன்றுவிட இடம் தேடும்
அசுரப் பறவைகளுக்கு - இன்று
பிரசவ நாள்!
மனித உயிர்களின்
மலிவு விற்பனை
மின்னாமல் முழங்காமல்
ஆரம்பித்து விட்டது.
பூமித்தாயின் வயிற்றுக்குள்
மனிதப் புழுக்கள்
புகலிடம் தேடுகின்றன.
வீடு - வாசல்
மண் - பொன்
உற்றார் - உறவு அனைத்துமே
அசுரப் பறவையின்
அகோரப் பசிக்கு
இரையாகினாலும் - நாம்
வாழ்வோம் மடியும்வரை! ஏனென்றால்
உறுதிகொண்ட
எம்மிதயவானில் முளைக்கும்
நம்பிக்கை நட்சத்திரம்
இன்னும்
எம் கைநழுவிப் போகவில்லை-ஆதலால்
நாம் வாழ்வோம் மடியும்வரை
''நீதியின் சூரியன்''
உதிக்கும் - அதன்
வெப்பக் கிரணங்களால்
உலோகக் கழுகுகள் - ஒருநாள்
உருகிச் சிதறும்
மறுபடி பிறந்து வருவோம் - ஆம்
நாம் குழிகளிலிருந்து
உயிர்த்து - எழுந்து வருவோம்!
இறைமகன் வழியிலே
தொடர்வோம்,
இயேசுவைத் தொடர்ந்து - நம்
பெயர்களைப் பொறிப்போம்
சாதனை படைப்போம்
நாம் வாழ்வோம்
மடியும் வரை
எம் நம்பிக்கை மூச்சு
முடியும் வரை!!

## ஒன்று இரண்டானது

ஆதி சமூகத்தில் 'கலை'யில், கலைஞனும் இரசிகனும் வெவ்வேறானவர் அல்லர்; இருவரும் ஒருவரே. பிறகு ''சித்தரிப்பு'' உருவான பின் பிரிவினை உண்டாகின்றது. கலை சடங்கோடு பிணைக்கப்பட்டிருந்த காலத்தில் அது சமூகக் கூட்டு நிகழ்வாக இருந்தது. கலை வர்த்தகமாக மாறிய போது நிகழ்த்துநர், பார்ப்பவர் என்ற பிரிவினை உண்டானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணிய பூமி

அ. ச. பாய்வா

எலும்புகளால் பல்துலக்கி
எச்சில்களால் முகந்துடைக்கும்
ஈழத்து விடியல்கள்

துப்பாக்கியால்
புழுதியை உழுது
ரவைகளால் சமாதான
விதைகளை விதைப்பாரெம்
''காக்கி'' உழவர்கள்

விதைகள் பட்டதால்
வீழ்ந்து முளைத்த
மரணப் பயிர்களில்
விதவைக் கதிர்களை
உச்ச அறுவடையாய்
ஐ எம். எப்க்கும் காட்டும்
புண்ணியபூமி

தானுமொரு
விதைமட்டு வீழ்ந்தவளென்ற
உணர்வின்றி
உழவருக்குக் கஞ்சியும்
ஏரும் எருதும்
பிச்சைகேட்டுப் பாரெங்கும்
பாத்திரமேந்திப் புறப்படுவாள்
பத்தினிப் பெண்ணொருத்தி

பிரிந்து போகும் தேசத்துக்கு
முட்டுக்கொடுக்கத்தன்
மூன்றாவது காலையும்
மீட்டு வந்த அமைச்சனையும்
(பனைமுடிவென்ற மைந்தன்)
தமிழன் உயிரைத்
தானமாய்க் கேட்கும்
சீவர ஆடைச் சித்தர்களையும்
கழுகுத் தேவதையின்கால்
வெண்புறாவையும்

கசாப்புக் கடைகளில்
காருண்யம் பெருக்கெடுக்க
நீலத்துகிலில்
மஞ்சட் குளித்துப் பவுர்ணமியாய்
திங்கள்தோறும் சிரிப்பாள்
சந்திரிகை


எலும்புகளில் பல்துலக்கி
எச்சில்களில் முகந்துடைக்கும்
ஈழத்தில் விடியல்கள்

## முதல் ஊடகம்

மனிதனின் முதல் தொடர்பூடகம் மொழிதான். சைகைகள், உடல் அசைவுகள், குறிப்பு மொழி, சித்திர அடையாளங்கள் ஆகியவற்றுக்குப் பிறகு மனிதன் உருவாக்கிக் கொண்ட முற்று முழுதான தொடர்பூடகம் மொழிதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ந. பார்த்திபன்**

## —31—

"டேய், என்ரை பிள்ளை மேல கையை வச்சிட்டாங்க .. இனி விடக்கூடாது நாங்களோ - அவங்களோ என்றொரு கை பாத்திடணும்" என ஆக்ரோஷமாய் அந்தோனிப்பிள்ளை பேசிக் கொண்டு நிற்கிறார். அவரைச் சுற்றி உறவினர்கள் சிலர். அழுத கண்களும் - சிந்திய மூக்குமாய் ரலீனா. ரலீனா நிற்பதனால் அவ்வளவு ஆக்ரோஷத்திலும் இஸ்லாத்தைத் தாழ்த்தியோ ரலீனாவின் குடும்பத்தைத் தாக்கியோ அந்தோனிமுத்து பேசவில்லை.

தன்னையொரு கையாலாகாதவனாக்கி, தாக்கிவிட்டுப் போனவனை விட்டிட்டேனே என்ற நினைப்போடுசோர்ந்த முகத்துடன்வந்த வின்சனைக் கண்டதும் அந்தோனிப்பிள்ளையின் கோபம் கொப்பளிக்கிறது.

"விட்டிட்டியேடா அவனை அவனை அடிச்சு... சீ.... பக்கத்துக் கடையில் ரெண்டு சோடாப் போத்திலெடுத்து அடிச்சுடைச்சு குத்திச் சரித்திருக்க வேண்டும்.. ம் அவனைத் தப்ப விட்டிட்டியே" பேசியபடி மகனின் மீது காயங்கள் ஏதும் தென்படுகிறதோ என்று கண்ணால் அவன் உடலைத் தடவுகிறார்.

தன் மனைவி வந்திருந்தால் அழுது ஊரைக் கூட்டியிருப்பாள் என்று தெரிந்தே அவளைத் தடுத்துவிட்டு வந்திருந்தார். வீட்டுக்குப் போனவுடன் அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமே என நினைத்தவராய் வின்சனிடம் விபரமெல்லாம் கேட்கிறார். அவன் பதில் சொல்லியபடி வீட்டுக்குள் செல்ல அந்தரங்கமாகப் பேச வேண்டும் என்ற நினைப்புத் தூண்ட அவனைப் பின் தொடர்கிறார்.

ஆசைக்கும் - ஆஸ்திக்கும் எனத் தான் பெற்ற வாரிசின் திருமண நிகழ்வின் போது வராத அவரது கால்கள், முதற்தடவையாக எவரது அழைப்புமின்றிப் போகின்றன.

ரலீனாவும் அவர்களைத் தொடர்ந்து வீட்டினுள் செல்கிறாள்.

இதுவரை விடுப்புப் பார்த்துக் கொண்டு நின்றவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை அள்ளித் தெளிக்கிறார்கள்

இஸ்லாமியரும் - கிறிஸ்தவரும் இல்லாத இந்துக்கள் அதிகம் வாழும் பகுதியில் வின்சன் - ரலீனா ஒதுங்கியிருந்தும் ஏன்தான் இப்படிப் பிரச்சினைகளைக் கொடுக்கிறார்களோ எனச் சிலர் ஆதங்கப்படுகிறார்கள். "அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை யொருத்தர் விரும்பினம் இடையில இருக்கிறவங்க ஏன்தான் இப்படி கஷ்ரத்தைக் கொடுக்கிறாங்களோ" என்ற வேதனை சிலருக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கதை

வின்சனின் உறவினர்களும் அந்தோனிப்பிள்ளையின் செலவில் இலவசமாகப் போதை ஏற்றிக் கொள்கின்றவர்களும் காரசாரமான கதைகளில் லயித்து வாய்ச் சவடால் அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"துலுக்கர்களுக்கு இதோட ஒரு பாடம் படிப்பிக்க வேணும். அடிச்சவனைத் தூக்கிடனும். இங்கை கொண்டு வந்து கட்டிவச்சு, கேட்டுக் கேட்டு அடிக்கனும் நாங்களும் குறைஞ்சவங்க ளில்ல என்று காட்டனும்."

வாய்ச்சொல் வீரராய் ஒருவருக்கொருவர் வார்த்தையால் உருவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். சாராயம் உள்ளே போய் அவர்களை ஆட்டிப் படைக்க வார்த்தைகளில் நெருப்பு மூட்டப்படுகிறது 'இண்டைக்கு அவங்க பகுதியில போய் ஒழுங்காச் சாப்பாடு கொடுக்கனும். ஓ சொல்லிப்போட்டன்' என ஒருவர் மீண்டும் மீண்டும் அதையே கூறுகிறார்.

பாங்கர் செலவழிப்பார் என்ற நம்பிக்கை. வின்சன் இஸ்லாத்தில் பெண் எடுத்த கோபம். எவன் பெண்டில் எவனோட போனா என்ன தொப்பைக்கு பத்து ரூபா எனக் கேட்கும் ஐயரின் மன நிலையில் அவர்கள்

இஸ்லாத்தை தாழ்த்தி இஸ்லாமியரைத் தாக்கினாலும், கிறீஸ்துவத்தைத் தாழ்த்தி கிறீஸ்தவரைத் தாக்கினாலும் பாதிக்கப்படுவது வின்சன் - ரஸீனா என நினைக்கும் பக்குவம் அவர்களுக்கு இல்லை. இந்த இரு மதங்களின் தலையீடு இன்றி அந்த இருமனங்களும்சங்கமிப்பதை பக்குவமாய் உணர்ந்து பிரச்சினையின் சூட்டைத் தவிர்ப்பதை விரும்பாது, தங்கள் சுயநலத்திற்காக, தங்கள் நானென்ற குணத்தைக் காட்டுவதற்காக, தங்கள் ஈகோவைத் திருப்திப் படுத்துவதற்காக முருகங்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊரான் சோற்றில் ருசி பார்க்கும் குணம் மேலோங்கி விட்டது. பாங்கர் அந்தோனிப்பிள்ளை தன் அக்கறையைக் காட்டுவதன் மூலம் மகனையும் மருமகளையும் தன்னோடு சேர்த்துக் கொள்ள இச்சம்பவத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள கிறார். செலவைப் பற்றிக் கவலைப்பட அவருக்கு பெண் பிள்ளைகள் இல்லை. உழைத்த பணம் தன் சந்தோஷம் போக பாங்கில் கிடந்து பெருமூச்சு விடுவதாக அவர் அடிக்கடி நினைப்பதுண்டு. அந்தப் பெருமூச்சைச் தணிப்பது போல தன் கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டுமென்பது அவரது எண்ணம்.

"தம்பி, பொலிசில ஒரு 'என்றி' போடுங்கள்" என ஒரு வயதானவர் சொல்ல முன், "எனக்குத் தெரியும் என்ன செய்வதென்று அடிக்கு அடி எடுக்காமல் பொலிசும் - என்றியும் அவங்கள் ரெண்டு பக்கமும் வாங்கிக் குடிச்சிட்டு நாய் மாதிரி அலைக்கழிக்கவோ ... சூட்டைத் தணிப்பதுதான் அவங்கட வேலைம் அவனை அடிச்சு வளத்திப் போட்டுத் தான் வேறை வேலை" சுற்றிவர நின்ற தன் ஆதரவாளர்கள் மத்தியில் பேசும் அரசியல்வாதிபோல போதையும் - கோபமும் சிவக்கச் செய்த கண்களோடு அந்தோனிப்பிள்ளை முடிவெடுத்திட்டார்.

ஒற்றர்களை அனுப்பி அடித்தவனை அறிந்து, அவன் செய்யும் தொழில், போய்வரும் பாதை, நிலைமை யாவும் அறிந்து தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டார் அந்தோனிப்பிள்ளை.


ஆள் தெரியாத அடி ஊமைக் காயம்.. ஆனாலும் பலத்த அடி. ஆஸ்பத்திரிக் கட்டிலுக்குப் பாரமாய் அடி வாங்கியவன்.

பள்ளிவாசலில் இளைஞர்கள் கூடினார்கள் சில பெரியோர்கள் 'இவனேன் அவனை அடிக்கோணும்' என அடித்தது நியாயம் என்ற வகையில் பேசிய போது பலர் நபிகளே சொல்லியிருக்கிறார். "ஒரு கன்னத்தில் அடிச்சவனுக்கு நீ மறு கன்னத்தில் அடி என்று பாப்பம் நாங்களோ- அவங்களோ மனித மூளைகள் அழிவுக்குத் தயாராகி, உற்பத்திக் காரணிகள் போருக்கு மாறிவிட்டன

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருச்சபைச் செய்திகள்

● கடந்த ஏப்ரல் மாதம் 21ம் திகதி உரோமையில் ஆசிய ஆயர் சிறப்புப் பேரவையைத் தொடங்கி வைத்தார், திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர். இதில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 188ஆயர்கள்கலந்துகொண்டனர். இதன் ஆரம்பத்தை ஒட்டி இடம்பெற்ற கூட்டுத் திருப்பலியில் சிறப்பு அம்சமாக கொரிய நடனங்கள், ஆசிய மொழிகளில் மன்றாட்டுக்கள் இடம்பெற்றன. வழிபாட்டில் மறை உரையாற்றிய திருத்தந்தை சீனாவில் இயங்கும், அரசால் அங்கீகரிக்கப்படாத கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த ஆயர்கள் இருவருக்கு ஆயர் பேரவையில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். ஆயினும், தற்போது உள்ள சூழ்நிலையில் ஆயர் பேரவையில் கலந்து கொள்ள முடியாத நிலையை சீன ஆயர்கள் தெரிவித்துள்ளனர். சீனாவில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சீனக் கத்தோலிக்க திருச்சபையும், அரசால் அங்கீகரிக்கப்படாத உரோமன் கத்தோலிக்க திருச்சபையும் இயங்கி வருகின்றன மே 14ம் திகதி வரை நடைபெறும் ஆசிய ஆயர் சிறப்புப் பேரவையில் ஆசிய ஆயர்கள், நிபுணர்கள், பார்வையாளர்கள் உட்பட 252 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

● வடகொரியாவில் பஞ்சத்தால் அல்லலுறும் மக்களுக்கு சர்வதேச சமுதாயம்உதவமுன்வருமாறு வற்புறுத்தினார் திருத்தந்தை 2ம அருள் சின்னப்பர். தமது மூவேளை செப உரையின் போது, பசியாலும் பட்டினியாலும் விரக்தி அடைந்துள்ள வடகொரிய மக்களை நோக்கி தவ சிந்தனைகள் செல்கின்றன என்றும் தலத்திருச்சபைகள், பிற நிறுவனங்கள், இன் நெருக்கடியான நேரத்தில் சவால்களை தாராள மனதுடன் ஏற்றுக் கொள்ள தாம் வலியுறுத்தும் வேளை, அங்கு உணவு உதவிகள் குறையாமல் இருக்க சர்வதேச சமுதாயம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றார். திருத்தந்தை, 1995ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இடம்பெற்றுவரும் கடும் வரட்சி. மற்றும் வெள்ளத்தை தொடர்ந்து வடகொரியாவிலுள்ள 2 கோடி 30 இலட்சம் மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

● குருக்கள் தங்கள் மேய்ப்புப் பணிகளில் பொது நிலையினருக்கு அதிக வாய்ப்புகள் வழங்கத் தயாராக இருக்க வேண்டுமென்று இந்தோனேசிய கர்தினால் கேட்டுக் கொண்டார். அண்மையில் ஜகார்த்தாவில் நடைபெற்றசிறப்புத் திருப்பலியின் போது இந்தோனேசிய ஒருமைப்பாட்டுக்கு உரையாடல்,பங்கேற்றல் போன்றவை அவசியம் என்றும், குருக்கள் மட்டுமே செயலாற்றுகின்ற தலைமைத்துவத்தை தவிர்த்து விசுவாசிகள் பெருமளவில் பங்குபெறும் மேய்ப்புப் பணியை உருவாக்க வேண்டுமென்றும் ஜகார்த்தாவைச் சேர்ந்த கர்தினால் ஜூலியஸ் கூறினார்.

● அமலமரித்தியாகிகள் சபையின் சிரேஸ்ட தலைவர் பேரருள் திரு. மார்செல்லோ சாகோ,மறைபரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் உயர் செயலாளராக திருத்தந்தையினால் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியை வகிக்கும் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த முதலாவது குரு இவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதே வேளை அமலமரித் தியாகிகள் சபையின் உதவி சிரேஷ்ட தலைவராக விளங்கிய பேரருள் திரு பிரான்சிஸ் ஜோர்ச், சிக்காக்கோ நகரின் கர்தினாலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அகதிகளாக வெளியேறும் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது தொடர்ச்சியாக நடைபெறும் வன்முறைகளினால் முழு இனமுமே தம் சொந்தத் தாயகத்தைவிட்டு வெளியேற வேண்டி வருகிறது தொடர்பு சாதனங்கள் உண்மைக்குப் புறம்பாக செய்திகளை வெளியிடுவதால் உண்மை மறைக்கப்படுகிறது, என்று 84 வது புலம்பெயர்ந்தோர் தினச் செய்தியில் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார். மேலும், அச்செய்தியில் உண்மைக்குப் புறம்பாக வெளியிடப்படும் செய்திகள் தம் உற்றாரைப் பிரிந்து தனிமையில் வாடும் இவர்களை புண்படுத்துவதாகவே இருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

## குருக்கள் மடத்தில் இடம் பெற்ற திருச்சிலுவைப் பாதை

ஆண்டவரின் திருப்பாடுகளை நினைவு கூரும் பெரிய வெள்ளி கிழமை அன்று குருக்கள் மடத்தில் இடம்பெற்ற சிலுவைப்பாதை மிகவும் பக்தி பூர்வமாக அமைந்திருந்தது. புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயத்தில் ஆரம்பித்து பங்கு ஆலயமான தேற்றாத்தீவு புனித யூதா தேவாலயத்தில் முடிவடைந்தது. சிலுவைப்பாதையில் இந்தியவிலிருந்து வருகை தந்த பிரான்சிஸ்கன் சகோதரர்களின் தலைமைச் சகோதரரும், அவரது ஆலோசகரும் கலந்துகொண்டு திருச்சிலுவையை ஏந்திச் சென்றனர். இவர்களுடன் பங்குத்தந்தை றேமன் அடிகளும் சிலுவை சுமந்து சென்றார். சிலுவைப்பாதைச் சிந்தனைகளை அருள் சகோ. ஜஸ்ரஸ் அவர்கள் மனதைத் தொடும் வகையில் நிகழ்த்தினார். பிறமத சகோதரர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட குருக்கள் மடத்தில் கிறீஸ்தவரல்லாதவர்களும் பக்திப் பரவசத்துடன் மரியாதை செய்ததை அவதானிக்க முடிந்தது. திருச்சிலுவைப் பாதைக்குரிய வாகன வசதியை திருக்கோவில் பிரதேச செயலாளர் திரு. S. அமலதாதன் அவர்கள் வழங்கி உதவினார். சிலுவைப் பாதைக்கான ஒழுங்குகளை தேற்றாத்தீவு மேய்ப்புப்பணிச் சபையினர் மேற்கொண்டிருந்தனர்.

தகவல் P. D. A. ஜெயக்குமார்.

## திருச்சபை புதுக்கப்பட வேண்டும்

கறீஸ்தவ விசுவாசிகள் ஒரு மறையுடலைச் சேர்ந்தவர்களாதலால் விசுவாசிகளுக்கிடையே உயர்வு தாழ்வு இல்லை என்று ஆசிய ஆயர் பேரவையின் போது கூறினார். கோட்ட பங்களம் மறைமாவட்ட ஆயர் குன்னக்கோட்டில். இறை மக்களின் ஒற்றுமை மூவொரு இறைவனிடமிருந்து வருகிறது என்று கூறும் ஆயர் குன்னக்கோட்டில் சமரச உடன்பாடு, பரஸ்பர உறவு, பொது நிலையினரது சமமான ஈடுபாடு ஆகியவற்றின் வழியாக இவ் ஒற்றுமை உருவாகுமென்றார்.

திருச்சபை, பணியாற்றும் திருச்சபையாக அமைய வேண்டுமானால் நிர்வாகத் தன்மை கொண்ட தலைமைத்துவம் களைந்து தூய ஆவியில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றார் ஆயர் குன்னக்கோட்டில். வளர்ந்து வரும் அழிவுக் கலாசாரத்துக்கு ஈடுகொடுக்க விவிலிய அறிவு நிறைவாக வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஆயர், இறை வாக்கின் மீது ஆர்வமும் அன்பும் கொண்ட விவிலிய வழிபாடு ஊக்கிவிக்கப்பட வேண்டும் என்றார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாக்காணும்
# இறை பராமரிப்புக் கன்னியர்கள்
# 1948 - 1998



துறவரசபைகளை நினைவிற்கொள்ளும் போது நல்லாயன் சபை, திருக்குடும்பசபை திருச்சிலுவைக் கன்னியர் சபைகள் தான் எமக்கு நினைவுக்கு வருகின்றன. ஆனால் இலை மறைகாய் போல எத்தனையோ சபைகள் முழு உலகிலும் சிறப்பாக எமது நாட்டிலும் இருப்பதை பலரும் அறியாமலிருக்கலாம். அவைகளில் ஒன்றான தேவ பராமரிப்பின் கன்னியர் சபையினர் தமது 50 ஆண்டு பொன் விழாவை கொண்டாட இருக்கின்றனர்.

பிரான்சிய புரட்சிக் காலத்தில் அனாதரவான சிறுவர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களை நல்வழிபடுத்தவும், கவனிப்பற்றுக்கிடக்கும் நோயாளிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆவலினாலும் உந்தப்பட்ட அருட் தந்தை Jacues Francois Dujaric க்கு ஊக்கமளிக்க இரு இளம் யுவதிகள் முன் வந்து தங்களது தியாகம் நிறைந்த சேவையால் பல உயிர்களைக் காப்பாற்றினர். இவர்களது சேவையை அறிந்த பல பெண்கள் முன்வந்து இணைந்தனர். பிரான்ஸ் நாட்டில் றுய்யே என்ற சிறிய கிராமத்தில் 1806 ஆண்டில் தேவ பராமரிப்பின் கன்னியர் (Sister of Prouidence) என்னும் பெயரில் துறவற சபையை அருட் தந்தை Jacues Duraie ஆரம்பித்து வைத்தார். நற்செய்தியை ஒரு போதும் கேட்டிராத மக்களுக்கு அதை அறிவிக்கும் பணியை அருங்கொடையாகவும் சேவை மனப்பான்மையும் தாழ்மையும் உறுதுணையாகவும் கொண்டு இயங்குவதே இச் சபையின் நோக்கமாகும்.

1948ம் ஆண்டு எமது நாட்டிற்கு காலடி எடுத்து வைத்த கன்னியர் அறுவர் மூலமாக வெலிசறை வைத்தியசாலையில் இவர்களது பணி முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களது பணியினால் ஈர்க்கப்பட்ட எம் யுவதிகள் பலர் இச் சேவையில் தம்மையும் அர்ப்பணித்தனர். உலகளாவிய ரீதியில் மக்களின் இன்றைய தேவைகளை அறிந்து இயங்கும் இச்சபை இங்கிலாந்து, ஒல்லாந்து மடகஸ்கார், நெதர்லாந்து போன்ற நாடுகளிலும் எமது நாட்டில் ராகம தேவத்தையை தலைமையகமாகவும், கோட்டை, மீரிகம நாத்தாண்டியா, அநுராதபுரம், கடுகண்ணாவ நுவரெலிய போன்ற இடங்களிலும் சேவை பல புரிந்து வருகிறது.

தமது வாழ்வையே இறைவனுக்கு அர்ப்பணஞ்செய்துள்ள இச்சபைக் கன்னியர், மக்களின் ஆன்ம வளர்ச்சிக்கு உதவும் வகையில் சமய அறிவுபுகட்டல், நோயாளிகளைச் சந்தித்து குருக்களுடன் தொடர்பு கொண்டு நற்கருணை வழங்கல், குடும்பங்களை சந்தித்து சீரழிந்த குடும்பங்களை ஒன்றுபடுத்துதல் போன்ற சேவைகளில் ஈடுபட்டு இறையரசை கட்டி எழுப்புவதில் முழு மூச்சுடன் செயல்பட்டு வருகின்றனர்.

(18ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ஸ்ரீ நூலகம்.

# புனித நாட்டுப் பயணம்

தொடர் — 24

O அருள் தந்தை பி. ஜோசப்

இயேசுவின் சாபத்திற்குள்ளான கப்பர் நகூம இன்றில்லை என்பதை அறிந்தோம். ஆனால் கப்பர் நகூமுக்கு அண்மையில் இயேசுவின் காலடி பட்ட இடங்களாக அல்லது நற்செய்தியில் குறிப்பிட்டுள்ள மூன்று முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்றதற்குச் சான்றாக எழுப்பப்பட்டுள்ள மூன்று முக்கிய ஆலயங்களையும் தரிசிக்கும் பேறு பெற்றோம். அவைதான் முறையே. ''அப்பங்கள் பலுகப் பட்ட ஆலயம்' 'புனித பேதுருவின் தலைமைத்துவ ஆலயம்' மலைப்பொழிவின் ஆலயம்' என அழைக்கப்படுகின்றன. மூன்று ஆலயங்களும் கலிலேயாக் கடலின் வடமேற்குக் கரையில் கப்பர் நகூம் இருந்த இடத்திற்கு அருகில் உள்ளன. கி. பி. 381 - 384 அளவில் புனித நாட்டுக்குப் பயணம் செய்த எகேரியா (EGERIA) என்பவர் விட்டுச் சென்ற வரலாற்றுக் குறிப்புக்கள் இவற்றுக்குச் சான்று பகர்கின்றன.

## அப்பங்கள் பலுகப்பட்ட ஆலயம்

இயேசு ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்தளித்த புதுமை (மாற் 6:35 44, மத் 14:13 - 21; யோவான் 6:1 - 6) இடம் பெற்றதன் நினைவாக எழுப்பப்பட்டுள்ள ஆலயமாகும். இங்கு முதன் முதல் கி. பி. 5ம் நூற்றாண்டில் கீழைத்தேய உரோமைப் பேரரசின் காலத்தில் ஆலயம் எழுப்பப்பட்டிருக்கின்றது. ஏனெனில் 1932ம் ஆண்டில் அவ்விடத்தில் புதிய ஆலயம் அமைப்பதற்காக அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்ட போது 5ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட ஆலயத்தின் தரையில் பொருத்தி அழகுபடுத்தப்பட்டிருந்த 'பன்னிற மணிபொருத்தி இணைத்த' MOSAIC கண்டு பிடிக்கப்பட்டது. பாலஸ்தீன நாட்டிலே தற்போது பாதுகாக்கப்பட்டு வரும் மிகப் பழமையானதும், அழகியதுமான அந்தப் பன்னிற மணி பொருத்தி இணைத்த ஓவியம் சிறந்ததொரு ஓவியனால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதிலே பாலஸ்தீன நாட்டில் காணப்படும் பல்வகைப் பறவையினங்களும், தாவர வகைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதே போன்று பீடமாகப் பயன்படுத்தப் பட்ட கல்லில் அப்பக் கூடையும், இரண்டு மீன்களும், பன்னிற மணிபொருத்தி அமைக்கப் பட்டுள்ளன. 'எகேரியா' என்பவரின் கூற்றுப் படி அக்கல்லில்தான் நம் ஆண்டவர் அப்பங்களை வைத்து ஆசீர்வதித்திருக்க வேண்டும் என்றும், அக்கல்லே பின்னர் பீடமாகப் பயன் படுத்தப்பட்டது எனவும், நம்பப்படுகின்றது. வழமைபோல அந்த ஆலயத்திலும் நாங்கள் அனைவரும் சேர்ந்து கூட்டுப்பலி செலுத்தி அப்பங்களைப் பலுகச் செய்த நிகழ்ச்சியில் ஒன்றிணைந்தோம்.

## புனித பேதுருவின் தலைமைத்துவ ஆலயம்

'அப்பங்கள்' பலுகப்பட்ட ஆலயத்திலிருந்து' 200 யாருக்கு அப்பால் புனித பேதுருவின் தலைமைத்துவ ஆலயம் காணப்படுகிறது. தற்போதுள்ள ஆலயம் பிரான்சிஸ்கன் சபையினரால் 1933ம் ஆண்டில் கட்டப்பட்டது. அது 'கிறிஸ்துவின் மேசை (Mersa-Chirsuhi) என்று சொல்லப்பட்ட ஒரு பெரிய பாறையின் மேல் கட்டப்பட்டுள்ளது. அவ்விடத்தில்தான் உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குக் காட்சியளித்து அவர்களுக்கு காலையுணவைத் தயாரித்துக் கொடுத்த நிகழ்ச்சி (யோவான் 21:9) நினைவு கூரப் படுகின்றது. மேலும் பேதுருவுக்கு 'எனது' மந்தைகளை மேய்' (யோவான் 21 ;17) எனக் கட்டளையிட்டு தலைமைத்துவ அதிகாரத்தை ஏற்படுத்தியதையும் நினைவு படுத்துவதால் அதனை 'பேதுருவின் தலைமைத்துவ ஆலயம்' என அழைக்கின்றனர். இவ்வாலயம் கி. பி. 4ம் நூற்றாண்டில் அமைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு பின்னர் கி. பி. 13ம் நூற்றாண்டில் அழிக்கப்பட்டாலும் அதன் அத்திவாரம் இருந்ததால் அதன்மேல் 1933ம் ஆண்டில் புதிய ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. உருவத்தில் சிறியதாக இருந்தாலும் உறுதியானதாக உள்ளது. கலிலேயாக் கடலின் ஓரத்தில் உள்ள கற்பாறையின் மேல் கட்டப்பட்டிருப்பதால் அவ்வாலயத்தின் இரு பக்கச் சுவர்களில் கடல் நீர் தொட்டுக்கொண்டிருப்பது மேலும் அவ்வாலயத்துக்கு மெருகூட்டுவது போன்றுள்ளது.

## மலைப்பொழிவின் ஆலயம்

மத்தேயு நற்செய்தி 5ம் அதிகாரத்தில் குறிப்பிடப்படும் மலைப்பொழிவு இடம் பெற்றதாகக் கூறப்படும் இடத்தில் பெரியதொரு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் கி. மு. 4ம் நூற்றாண்டில் சிறியளவில் அதே இடத்தில் இருந்ததாகவும் 7ம் நூற்றாண்டில் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாகவும் பின்னர் 1938ம் ஆண்டில் பிரான்சிஸ்கன் சபையினர் அதே இடத்தில் 'எட்டனமானம் சார்ந்த வடிவத்தில் 'எட்டுப் பேறுகளையும் குறிக்கும் விதத்தில்தற்போதுள்ள ஆலயத்தை அமைத்ததாகவும் எங்கள் வழிகாட்டி விளக்கமளித்தார்.

அதனை மலை என்று கூறுவதைவிட கலிலேயாக் கடல் மட்டத்திலிருந்து அப்பகுதியில் உள்ள ஏனைய இடங்களை விட சற்று உயரமான பகுதி என்று குறிப்பிடலாம் அவ்வாலயத்தின் பின் பகுதிக்குச் சென்றால் கலிலேயாக் கடலையும் அதனைச் சுற்றியுள்ள எல்லாப் பகுதிகளையும் ஒரே நேரத்தில் கண்டு களிக்கக் கூடிய விதமாக அவ்வாலயம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அடர்ந்த உயர்ந்த மரங்களின் குளிர்மையும், கடலில் இருந்து வீசும் தென்றல் காற்றும், அங்கு நிலவிய அமைதியும் பாலைவனச் சோலைக்குள் புகுந்து விட்ட உணர்வை எமக்குத் தந்தது. அதனால்தான் இயேசுவும் அத்தகையதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்து தமது நற்செய்திப் பொழிவை நிகழ்த்தியிருக்கின்றார்.

## மக்தலா (MAGDALA)

இயேசுவின் கலிலேயாப் பணியில் முக்கிய நிகழ்வுகளின் நினைவுக்குச் சான்று பகரும் பல இடங்களையும் சிறப்பாக ஆலயங்களையும் தரிசித்து களைத்துப் போய் விட்ட எம்மை மாலை 6 மணியளவில் கலிலேயாக் கடலோரத்தில் திபேரியாவிலிருந்து ஏறக்குறைய 4மைல் தொலைவில் அமைந்திருந்த வேறொரு முக்கிய இடத்திற்கு சிற்றுண்டி அருந்துவதற்காக அழைத்துச் சென்றனர்.

தலைப்பைக் கண்டவுடனேயே இடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பீர்கள், ஆம் இயேசுவின் வாழ்வில் நெருங்கிய ஒருவரின் பிறப்பிடம் அல்லது வதிப்பிடம் இதுதான் இன்னுமா புரியவில்லை! ஏழு பேய்கள் நீங்கப் பெற்றவளும் (லூக் 8:3) இயேசுவின் நெருங்கிய, பிரமாணிக்கமுள்ள சீடத்தியாக கல்வாரிவரை அவருக்குப் பின் சென்றவளும் அதிகாலையில் கல்லறைக்கு முதன்முதல் வந்தவளும், உயிர்த்த கிறிஸ்துவை முதன்முதல் காணும் பேறுபெற்றவளுமான (யோவா 20 : 14) மதலேன் என்னும் மரியாளின் சொந்த ஊர்தான் ''மக்தலா''வாகும்

இயேசுவின் காலத்தில் இந்நகரம் 40,000 மக்களை வதிப்பிடமாகக் கொண்ட பெரிய மீன்பிடி நகரமாக விளங்கியதாக வரலாறு கூறுகின்றது. அதன் தெற்கே கப்பர்நகூமும் அருகே தல்மனூத்தாவும் (மாற் 8 : 10) அமைந்திருந்தன. இதனை 'மகதா' எனவும் அழைக்கின்றனர் (மத 15 : 39). இயேசு இந்நகருக்கும் வந்து நற்செய்தி அறிவித்திருக்கின்றார்.

ஆனால் அதன் நினைவாக இன்று எதுவும் இல்லை எருசலேம் நக உரோமையர்களால் அழிக்கப்பட்ட பிறகு யூதர்களின் பிரதான கல்விக் கூடமாக மக்தலா மாறியது. கடற்கரையில் உல்லாசப் பயணிகளுக்கான சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று எங்கள் களைப்பை ஆற்றிக் கொண்டே கலிலேயாக் கடலின் மாலை நேரக் காட்சியை இரசித்துக் கொண்டிருந்தோம். சுமார் இரவு 7மணியளவில் நாங்கள் தங்கியிருந்த விடுதி நோக்கிச் சென்றோம்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிக்கும் மாமனிதர்

## கதைசொல்லும் விவிலியம் - 3

## 1 சாமுவல் 26: 1 - 25

— எஸ். ஜெயராஜா

அன்பான பிள்ளைகளே! இம்முறை மன்னிப்பை எடுத்துச் சொல்லலாம் என்றிருக்கிறோம். விவிலியத்திலே மன்னிப்பையிட்டுப் பரவலாகச் சொல்லப்படுகிறது. அவற்றுள் இறைமகன் இயேசுவின் மன்னிப்பு உயர்ந்து நிற்கிறது, மனுஷீகத்தில் தாவீது, சவுல் அரசனை மன்னிக்கும் பாங்கு மனதைக் கவர்கின்றது. அந்தக் கதையை இப்போது படித்துப் பாருங்கள்.

தாவீது, கோலியாத்தை வென்ற பிறகு மக்கள் 'சவுல் கொன்றது ஆயிரம் பேர், தாவீது கொன்றதோ பத்தாயிரம் பேர்', என்று வாழ்த்தினார்கள். அன்று முதல் தாவீதின் மேல் சவுல் அரசனுக்கு ஒருவிதவெறுப்புணர்வு ஏற்பட்டுவிட்டது. நாளடைவில் அது வளர்ந்து, விரிந்து அவனைக் கொலை செய்யுமளவுக்கு வளர்ந்தது. பிலிஸ்தியருடன் போரிட வைத்துப்பழி தீர்க்க எண்ணினான், மனைவியோடிருந்தவனைப் படுக்கையறையிலே பிடிக்க முயன்றான். இவைகளிலிருந்து தப்பிக் காடு, மேடுகளில் அலைந்த தாவீதைத் தேடி அழிக்கும் முயற்சியை சவுல் அரசன் தொடர்ந்தான்.

அவன் மனம் வன்மத்துக்குள்ளாகியது, தாவீதைக் கொன்றே தீருவது எனச் சூழுரைத்தான். அக்கிலா மலைக்குன்றில் தாவீது ஒளிந்திருக்கிறான் என்றுகேள்விப்பட்டு,தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் வீரர்களுடனும் ஆற்றலும் வல்லமையுமுள்ள படைத்தலைவன் அப்நேர் போன்றவர்களுடனும் ஜிப் பாலைவனத்துக்குப் பயணமானான். அங்கே அக்கிலாவுக்குப் போகும் வழியிலுள்ள காபாவில் பாசறை அமைத்துத் தங்கியிருந்தார்கள். இவற்றையெல்லாம் ஒற்றர்கள் மூலம் சரியாகத் தெரிந்துகொண்ட தாவீது, தோழர்களுடன் சற்றுத்தூரத்திலிருந்த மலையுச்சியை அடைந்தான். அங்கிருந்து பார்த்தால் சவுலின் கூடாரம் தெரியும், கூப்பிடும் தூரம் தான் ஆனால் இரண்டு மலைகளுக்குமிடையே பாரிய பள்ளமிருந்தது, இலகுவில் கடக்க முடியாத பள்ளம். அடுத்த மலையுச்சியை அடைந்த தாவீது, அப்நேர் அப்நேர் என்று படைத்தலைவனைக் கூப்பிட்டான். தூக்கம் தடைப்பட்ட கோபத்தில் எழுந்த அப்நேர் 'யாரது அரசரின் தூக்கத்தைக் கெடுப்பவன்' என்று அதட்டினான். அதற்குத் தாவீது, நீ ஒரு ஆண் மகன்தானா? ஆற்றல் மிக்க படைத் தலைவனா? உன் தலைவனைக் கொல்ல நான் வந்தேன், நீயோ தூங்கிக் கொண்டிருந்தாய், அவருடைய உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அவருடைய ஈட்டியைத் தானும் காப்பாற்ற உம்மால் முடியவில்லை. அவை என்னிடமிருக்கிறது. அபிஷேகம் பண்ணப்பட்டவரை கொல்வது பாவம் என்று அரசரை விட்டுவந்தேன் என்றான். அனைவரும் திகைத்துவிட்டனர், அவமானத்தால் குறுகினர். இதற்குள் சவுல் அரசனும் தாவீதின் குரல் கேட்டு, ''மகனே, தாவீது இது உன் குரல் தானா, நான் பாவம் செய்தேன், நீ என் உயிரை இவ்வளவாக மதித்ததினால் நான் உனக்குத் தீங்கு செய்ய மாட்டேன், திரும்பி வா'' என்று கெஞ்சிக் கண்ணீர் விட்டார். ஆனாலும் தாவீது தன் வழியே போய் விட்டான்.

அன்பான பிள்ளைகளே! பகைவனை மன்னிக்கும் தாவீதின் பாங்கு நம்மைக் கவர்கிறது. அருமையான சந்தர்ப்பங்கள் அமைந்த போதும் மனச்சாட்சிப்படி நடந்து கொண்டான், இதுவே அவனை உயர்த்தி அரசனாக்கியது. நாமும் பிறரை மதித்து, மன்னித்து மனச்சாட்சியோடு வாழ்ந்து மேன்மையடைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்

○ மெற்றில்டா

## புனித பார்பரா

இவர் கடவுள் நம்பிக்கையில்லாத ஒரு குடும்பத்தில் வாழ்ந்தவர். இளமையில் இவர் மிகவும் அழகாகக் காட்சியளித்தார். இவரது அழகினால் பல இளவரசர்கள் கவர்ந்திழுக்கப் பட்டனர். எனவே, அனைவரும் பார்பராவின் தந்தையாரிடம் வந்து, அவரைத் தமக்குத் திருமணஞ் செய்து தருமாறு கேட்டனர். பார்பராவோ எவரையும் திருமணஞ் செய்ய முடியாதென மறுத்தார். ஆனால், தந்தை யாரோ பொறாமையுள்ளத்துடன் ஒரு கோபுரத்தை அமைத்துக் காவலுமிட்டுச் சிறையில் வைத்தார். ஆனால், தூயவளான பார்பராவோ இந்நாட்களை நன்கு பயன்படுத்தினார். அங்கு, இவர் செபிப்பதிலும், சத்திய மறை பற்றி அறிவதிலும், திருவருட்சாதனமான திருமுழுக்கினைப் பெறத் தம்மை ஆயத்தப்படுத்துவதிலும் ஈடுபட்டார். அத்துடன் நில்லாமல், இரகசியமாகத் திருமுழுக்கையும் பெற்றார்.

இவர் மனமாற்றம் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்ததையறிந்து கொண்ட தந்தை சினங் கொண்டார். தனது ஆத்திரத்தை அடக்க முடியாமல் அவரைக் கொல்லத் தன் வாளினை அவரை நோக்கி வீசினார் ஆனால் அவர் இறக்கவில்லை. இறைவன் அவரைப் பாதுகாத்தார். இதன் பின்னர் தன் மகளை நீதிமன்ற விசாரணைக்குத் தந்தையார் கையளித்தார். நீதிபதியோ தமது தெய்வங்களை ஏற்றுக் கொண்டு, அவற்றிற்கான பலிகளை ஒப்புக் கொடுக்குமாறும், அதற்கு மறுத்தால்; பயங்கரமான சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டு மரணிக்க நேரிடும் எனவும் தெரிவித்தார். பார்பரா எதற்கும் அஞ்சவில்லை. ''நான் என்னை முழுவதும் இறைவனான இயேசுவிடம் ஒப்படைத்துவிட்டேன். அவரே வானம், பூமி அனைத்தையும் படைத்தவர்'' என்று பதிலிறுத்தார்.

இதனால் பார்பரா சித்திரவதைக்குக் கையளிக்கப்பட்டு அடிக்கப்பட்டார். ஆனால், இறைவனது பராமரிப்போ அவரை விட்டு நீங்கவில்லை. நீதிபதிகளோ வாளால் மரண தண்டனை நிறைவேற்றக் கட்டளையிட்டனர். ஆனால், இவ்வேளையில் அங்கு அவரது தந்தை வந்து அவரை அழைத்துக் கொண்டு ஒரு மலைக்குச் சென்றார். அங்கே அவரது தலையை வெட்ட ஆயத்தமான வேளையில், பார்பரா செபித்துக் கொண்டிருந்தார். இறைவன் அவரது ஆன்மாவின் மீது இரக்கம் கொண்டார். அங்கு ஒரு புதுமை நிகழ்ந்தது. வானத்திலிருந்து நெருப்பு வந்து தந்தையை எரித்தது. இவ்வாறாக இறைவனுக்காகப் பல துன்பங்களை அடைந்த பார்பரா கி.பி 235ம் வருடத்திலே வேதசாட்சியானார். மின்னல், நெருப்பு போன்ற அபாயங்களிலிருந்து இவர் தம்மை காப்பார் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.

இறைவன் தமது புதுமைகள் மூலம் இவரைக் காக்குமளவுக்கு இவரில் அன்பு கூர்ந்தார் என்பதை நாம் ஏற்க வேண்டும். சிறைப் பட்டோரின் பாதுகாவலராக இவரைத் திருச்சபை நியமித்துள்ளது. இவரது அசையா விசுவாசத்தை நாமும் பெற்று இறைவனை மகிமைப்படுத்த வரம் வேண்டுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதொரு

# தலைமைத்துவத்துக்கான தேடல்

□ கலாநிதி என். சண்முகலிங்கன்



1. ''நல்லதொரு தலைமை வேண்டும்'' ! தனியனின் குடும்ப வாழ்விலிருந்து தேசங்களின் அரசியல் வரை தலைமைத் துவத்தின் தேவை இன்று பெரிதும் உணரப்படும்.

இன்றைய சமூக அறிவியல் துறைகளின் கவனமும் இந்த விடயத்தில் முக்கியத்துவம் பெறும். குறிப்பாக இன்று முகாமைத்துவத்தின் வழியான சமூக மேம்பாடு என்ற கோட்பாடுகளும் கூட முதன்மைபெறும். இங்கெல்லாம் நல்ல நிலைமை பற்றிய சிந்தனைகளே மேலெ முந்து நிற்கும்.

2. நல்லதொரு தலைமைத்துவத்தின் பண்புகள்

— துணிவு
— தளரா மனது
— அயரா உழைப்பு
— ஆற்றல் பெருக்கு
— அனைவரிடமும் பரிவு
— அனைவருடனும் இசைந்து நடக்கும் பண்பு
— ஏனையோரை செயற்படுத்தும் திறமை
— அடக்கம்

என நல்லதொரு தலைமைத்துவத்தின் பண்புக் கூறுகளை இனகாட்டுவோர் அல்போட் என்ற உளவியலாளர்.

இவற்றோடு

— சுதந்திரமான சிந்தனை
— மதிநுட்பம்
— நேர்மை என்பனவும் இணைகின்ற போது சிறந்ததோர் தலைமைத்துவம் முகிகின்றதெனலாம்.

இன்றைய யாதார்த்தம் எப்படி இருக்கிறது?

1. இத்தனை சமூக மாற்றங்களின் பின்னரும், சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் பால் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தும் நிலமைகள் தொடரவே செய்யும் அவலம். ஆதிக்க வெறியுள்ள இடத்தில் - நியாயமில்லாத ஆதிக்கமாக உள்ள விடத்து எப்படி நல்ல தலைமைத்துவம் உருவாக முடியும்?

2. சமூகநிறுவமைப்புகளைப்பொறுத்தவரை ஆளுமைத்திறன் அல்லாதவர்கள்-குறுக்கு வழிகளில் அரசியல் பின் கதவுகள் வழி முன்னுக்கு வரும் போது எப்படி தலைவராய் வழி நடத்த முடியும்? ஆன்மீக நிலமை என்று புறப்பட்டவர்களிடை கூட 'கள்ளச் சாமி' திடுக்கிடும் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3. தேசத்தலைமைகள் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை, ஜனநாயகத்தின் பெயரால் புள்ளடி எண்ணிக்கையில் தலைமைகளின் தேர்வு பத்து பதினைந்து புள்ளடியுடன் கூட இன்று தலைமைகள். இதனை விட பலபல வழிகளில் அடாவடித்தனமான தலைமை திணிப்புக்கள் என தலைமைத்துவத்துக்கான எந்த லட்சணமும் இல்லாத தலைகளே அதிகரிக்கும் நிலமைகள்.

4. இந்நிலையில் எப்படி நாங்கள் மீள்வது? தலமைத்துவம் தொடர்பான மக்கள் விழிப்புணர்வின் வழிதான் எந்த ஒரு மாற்றமும் சாத்தியமாக முடியும்.

நல்ல தலைமைகளை இனங்காண்பதும், அல்லாதவைகளை இனங்காட்டி தள்ளிவைப்பதும் மக்கள் விழிப்புணர்வின் வழிதான்.

ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன நம்மட காரியம் முடிஞ்சா சரிதான்.

குறுக்கு-குறுகிய நிலை என்றுமே எங்களுக்கு தலைமைத்துவங்களைத் தரப் போவதில்லை.

இத்தகு விமர்சன விழிப்புக் களங்களை அமைப்பதில் சமூக மேம்பாட்டு அமைப்புகள் தங்கள் அர்ப்பணிப்புடன்ஈடுபடுத்த வேண்டும்

வாழ்வின் அனைத்து நிலைகளிலும் குடும்பம், சமூக அமைப்புகள், அரசியல் என விரியும் அனைத்துக் களங்களிலும் நீதியான, வல்லமை கொண்டு, சுய நல மற்ற தலைமைப் பண்புகளை வளர்க்கும் முயற்சிகள்-இன்றைய காலத்து அவசிய அவசர தேவையாகும்.

நல்லவரும் வல்லவரும்ஒதுங்கிபோகாமல், தலமைத்துவம் வேண்டி நிற்கும் அமைப்புக்களில் இணைந்து கொள்ள வேண்டும், வழிகாட்ட வேண்டும்.

12ம் பக்கத் தொடர்

50 ஆண்டு நிறைவை கொண்டாடும் தேவபராமரிப்பு சபை சகோதரிகளை வாழ்த்தி அவர்களது சேவை எமது நாட்டிற்கு இன்னும் அதிகம் தேவை என்பதை அறிந்து அழைப்பின் தெய்வத்தை இறைஞ்சுவோம் இவர்களது சபையில் இன்னும் பல யுவதிகள் சேர்ந்து இச்சபையானது முழு உலகிலும் சிறப்பாக எம் நாட்டிலும் ஆலமரம் போல் படர்ந்து அருகு போல் வேரூன்றி மூங்கில் போல் உயர்ந்து செழித்து சேவைகள் பல ஆற்றிட இறைவனை வேண்டுவோம்.

அத்துடன் 2000ம் ஆண்டை நோக்கி பயணம் செய்யும் நாம் நவீன உலகின் தொழில்நுட்ப தொலைத்தொடர்பு சாதனங்கள் மத்தியில் உலக இன்பங்களில் தோய்ந்து கிடக்கும் மனித இனம் இறை விசுவாசம் குன்றியதாக காணப்படுகிறது. எனவே ஞானஸ்தானம் மூலம் பெற்ற விசுவாசத்தை கட்டியெழுப்பி விசுவாச வாழ்வில் முழு சமுதாயத்தையும் வளர்த்து நற்செய்திப்பணியில் சிறந்து விளங்கிட தூய ஆவியானவர் அருள் இவர்களுக்கு என்றும் கிடைத்திட அருள் வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுத்த மனிதர் - வெள்ளை மனங்கள்

தொடர் — 03

ஆபிரிக்க பயணக் கட்டுரை

○ எஸ். ஏ. இருதயநாதன்

தென்னாபிரிக்கா இன்று ஒரு கிறிஸ்தவ நாடு. அங்கிலிக்கன், பிறிஸ்பெட்டேரியன், மெதடிஸ்ட், டயக்கோனியா கவுன்சில் ஒப் சேர்ச்சஸ், கத்தோலிக்க திருச்சபை என்பன தென்னாபிரிக்காவின் ஐந்து பிரதான கிறிஸ்தவ பிரிவுகளாக இன்று திகழ்கின்றன. ஆயினும் ஏனைய பிரிந்த சபைகளும் கறுப்பின மக்களின் ஆவி வழிபாடு என்பனவும்கூட தென்னாபிரிக்காவில் காணப்படுகின்றன.

தென்னாபிரிக்காவை கிறிஸ்தவம் 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எட்டியது. ஜெர்மனிய படை அணிகளாலும் பிரான்சிய புரட்டஸ்தாந்து போதகர்களாலும் வலுவூட்டப்பட்ட டச்சு குடியேற்ற வாசிகள் தென்னாபிரிக்காவின் "நன் நம்பிக்கைமுனை" (Cape of Good Hope) எனும் இடத்தில் வந்து குடியேறியபோது கிறிஸ்தவமும் அவர்களுடன் தென்னாபிரிக்க மண்ணைத் தொட்டது. இன்று இவ்விடம் கேப் டவுன் (Cape - Town) என அழைக்கப்படுவதுடன் வெள்ளையர்களின் பிரதான நகரமாகவும் அது திகழ்கிறது. பின்னர் நாளடைவில் ஆங்கிலேயர்கள் தென்னாபிரிக்காவை தமது குடியேற்ற நாடாக மாற்ற முனைந்தனர். இவர்களுடனும் கிறிஸ்தவம் தென்னாபிரிக்காவை வந்தடைந்தது.

இவ்வாறு டச்சுமொழி பேசிய டச்சுக்காரர்களும் ஆங்கிலம் பேசிய ஆங்கிலேயர்களும் தென்னாபிரிக்காவின் பல பகுதிகளிலும் குடியேறிய பண்ணை நிலங்களை அமைக்கத் தொடங்கியபோது உள்ளூர் சுதேச கறுப்பின மக்களுடன் முரண்படத் தொடங்கினர். தமது ஆயுத, பண பலத்தினால் சுதேசிகளை அடக்க முற்பட்டதுடன் தமது கலாசாரம் சமயம் என்பனவற்றையும் சுதேசிகளுக்கு ஊட்ட முற்பட்டனர். தம்மிடம் அகப்பட்ட கறுப்பின மக்களை அடிமைகளாக நடத்தியதுடன் தாம் பின்பற்றிய அனைத்து விடையங்களையும் அவர்களைக் கொண்டே செய்வித்தனர். இதனால் குடியேற்றவாசிகள் கொண்டு வந்த கிறிஸ்தவம் தென்னாபிரிக்க கறுப்பின மக்களுக்கு அன்னிய மதமாகவும் அடக்குமுறையின் வடிவமாகவும் தென்பட்டது. குடியேற்றவாசிகளுடன் வந்த பல கிறிஸ்தவ மிசனரிமார்களும் தமது பணிகளைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதற்கு உதாரணமாக 1738 இல் முதன்முதலாக நிறுவப்பட்ட மிசன் பத்து வருடங்களுக்கிடையில் மீண்டும் மூடப்பட்டதை கூறலாம்.

17ம் நூற்றாண்டு தொடக்கம் 19ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை குடியேற்ற வாசிகள் தமது இருப்பை நிலை நாட்டுவதிலும் தென்னாபிரிக்காவை முற்றுமுழுவதுமாக ஆக்கிரமிப்பதிலும் தமது பொருளாதார நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதிலும் முக்கிய கவனம் செலுத்தினர். இதனால் கிறிஸ்தவம் பெயரளவில் தென்னாபிரிக்காவில் இருந்தது. தென்னாபிரிக்க வெள்ளையின குடியேற்ற வாசிகள் வெறுமனே பாரம்பரிய கிறிஸ்தவர்களாக இருந்ததுடன் கிறிஸ்தவத்துக்கு எதிரான கொலை, அடிமைகொள்ளல், அசமத்துவம், ஆக்கிரமிப்பு, பாலியல் வன்முறை, இனவேறுபாடு கலாசார பாகுபாடு போன்ற பண்புகளை தமது நடத்தைகளாகக் கொண்டிருந்தனர். இவர்களது பாதுகாப்பின் கீழ் செயல்பட்ட மிசனரிகளும் கையால் ஆகாதவர்களாக, சமாளித்துக் கொண்டு தமது பணிகளில் அதாவது வெள்ளையர்களின் மதவேலைகளில் ஈடுபட்டனர். வெள்ளையர்களால் அடிமை கொள்ளப்பட்ட ஆயிரக்கணக்கான கறுப்பின மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றி கோவில்களை கட்டுவித்து தமது பௌதீக வளங்களை பெருக்கிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் தென்னாபிரிக்காவில் குடியேறிய ஆங்கிலேய டச்சு குடியேற்றவாசிகளிடையே போர் மூண்டது. இப்போரில் கொல்லப்பட்டவர்கள் கறுப்பின மக்களே, இதனால் கறுப்பின மக்களின் சூலூ, அமென்சூலு இனத்தலைவர்கள் ஆத்திரமுற்று வெள்ளையின குடியேற்ற வாசிகளுக்கெதிராக போர்தொடுத்தனர். இவர்களது கிளர்ச்சியை அடக்குவதற்கு டச்சு ஆங்கிலேயே குடியேற்றவாசிகள் தம்மிடையே ஓர் ஒப்பந்தத்தை செய்துகொண்டு ''யூனியன் ஒப் சவுத் ஆபிரிக்கா எனும் அமைப்பை 1910இல் தோற்றுவித்தனர். இதுவே முதலாவது தென்னாபிரிக்க அரசாகக் கருதப்பட்டது.

இக்காலப் பகுதியில் மெதடிஸ்த திருச்சபையினர் பிறிஸ்பைடேரியன் சபையினர் ஆகியோரால் வழி நடத்தப்படும் லண்டன் மிஸனரி சபை தென்னாபிரிக்காவிற்குள் நுழைந்தது. பின்னர் அங்கிலிக்கன் மற்றும் கத்தோலிக்க திருச்சபைகள் தென்னாபிரிக்காவிற்குள் காலடி எடுத்து வைத்தன. இத்திருச்சபைகள் குடியேற்றவாசிகளின் கொடூர நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன் கறுப்பின மக்களுடன் இணைந்து அநீதிக்கெதிராகப் போராட்டம் செய்தனர். இதனால் இத்திருச்சபைகள் கறுப்பின மக்களிடையே பிரபல்யம் அடைந்ததுடன் தமது மனமாற்றப் பணிகளை முன்னெடுக்கவும் செய்தனர். கிறிஸ்தவம் காட்டிய அன்பு, மன்னிப்பு, அநீதியின்பால் எதிர்ப்பு, நீதியின் பால் தாகம், விடுதலை, சமத்துவம் போன்ற விழுமியங்கள் கறுப்பின மக்களை விழித்தெழச் செய்தன. ஆயினும் பண பலமும் பிற மேற்குலக நாடுகளின் ஆதரவும் பொருந்திய தென்னாபிரிக்க வெள்ளையின மக்கள் கறுப்பின மக்களை மிகக்கொடூரமாக நசுக்கி ஒடுக்கினர்; இதனால் திருச்சபைகளும் பிளவுபட்டன.

இவ்வாறு திருச்சபை பிளவுபட புவியியல் காரணிகளே பெரிதும் உதவின. அதாவது வெள்ளையர்கள் மாநகரங்களிலும் நகரங்களிலும் வாழ, கறுப்பின மக்கள் பண்ணை நில குடிசைகளிலும் வெள்ளையர்களால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களிலும் (Township) வாழ்ந்தனர். வெள்ளையர்கள் வாழும் மாநகரங்களுக்கோ அல்லது நகரங்களுக்கோ கறுப்பின மக்கள் செல்லமுடியாது. இதனால் ஆலயங்கள் அவை அமைந்துள்ள பங்குகள் என்பன வெள்ளையர்களுக்கு வேறாகவும் கறுப்பர்களுக்கு வேறாகவும் பிரிக்கப்பட்டன. இவ்வாறான பிரிப்புக்களினால் கறுப்பின மக்கள் முற்றாகவே வெள்ளையின மக்களில் இருந்து பிரிந்து 2ம்தர பிரஜைகளாக வாழும் நிலை ஏற்பட்டது. இதனை எதிர்க்கும் வல்லமை வெள்ளையின திருச்சபைகளுக்கோ அல்லது கறுப்பின திருச்சபைகளுக்கோ இருக்கவில்லை. அத்துடன் கறுப்பின திருச்சபைகள் வெள்ளையின திருச்சபையினருக்குக் கீழ் இயங்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. அதேவேளை வெள்ளையின குருக்கள், துறவிகள் சில பொது நிலையினர் உண்மையான கிறிஸ்த விழுமியங்களால் தூண்டப்பட்டு கறுப்பின மக்களின் திருச்சபையுடனும் அவர்களின் விடுதலை மீதான வேட்கை உணர்வு கொண்ட கிறிஸ்தவ அமைப்புக்களுடனும் சேர்ந்து செயல்படத் தொடங்கினர். இவ்வாறு பணியாற்றியவர்களை வெள்ளையின அரசு சமயப்பணிகளை விடுத்து அரசியலில் ஈடுபடுகின்றனர் எனக்கூறி நாடுகடத்தியது.

இதனிடையே 18ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் தென்னாபிரிக்காவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. இத் தங்கச் சுரங்கங்களில் பணிபுரிய பெருமளவு தொழிலாளர்கள் வெள்ளையின முதலாளிகளுக்குத் தேவைப்பட்டனர். எனவே இவர்கள் தமது சகாக்கள் ஆக்கிரமிப்புச் செய்யும் இந்தியாவின் தமிழ், ஆந்திர, குஜராத் மானிலங்களில் இருந்து இலட்சக்கணக்கானவர்களை தென்னாபிரிக்காவிற்கு அழைத்து வந்தனர். ''தங்கம் வீதி ஓரங்களில் கிடக்கிறது. அதை எடுத்துப் பதனிட ஆட்களில்லை'' எனப் பொய் கூறியே இப்பாமர மக்களை ஆங்கிலேயர்கள் தென்னாபிரிக்காவிற்கு கடத்தி வந்தனர். இவ்வாறு கடத்தி வரப்பட்டவர்களுடன் இந்து, சைவம், இஸ்லாம் ஆகிய சமயங்களும் தென்னாபிரிக்க மண்ணை சென்றடைந்தன.


(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பூடகங்கள் வழி நிறைவை நோக்கி

* மலர்வேந்தன்



ஒவ்வோர் ஆண்டும் விண்ணேற்பு விழா வன்று கத்தோலிக்க திருச்சபை உலகத் தொடர்பு தின விழாவைக் கொண்டாடு கிறது. இவ்வாண்டு மே மாதம் 24ம் திகதி உலகத் தொடர்பு தின விழாவாகும்.

இயேசு விண்ணேற்பு அடைய முன்பு தமது சீடர்களுக்குக் கொடுத்த ஆணை; உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் (மாற்கு 16 : 15) என்பதாகும். இயேசுவின் இவ் வாணையே திருச்சபையின் முதன்மைப் பணி யாகும். திருச்சபை இவ்வுலகில் ஆற்றும் அனைத்துப் பணிகளுக்கும் அடிப்படையாய் இருப்பது நற்செய்தி அறிவிப்புப் பணியே.

அறிவிப்பு என்பது இயல்பிலேயே தொடர் பாடல் என்னும் பண்பைக் கொண்டது. நாம் ஒரு கருத்தை, செய்தியை, உணர்வைத் தெரிவிக்க வேண்டுமென்றால் நேரடி யாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு கொண்டாலன்றி அறிவிக்கவோ, தெரிவிக் கவோ முடியாது.

இத் தொடர்பியலில் இன்று நவீன தொடர்பு சாதங்கள் பிரமாண்டமான வளர்ச்சியைக் கண்டுள்ளன. இதன் அளப் பெரும் சக்தியைக் கண்டு கொண்ட திருச் சபை தனது உயிர் மூச்சான நற்செய்தி அறி விப்புப் பணிக்கு தொடர்பு சாதனங்களை முடிந்த அளவு பயன்படுத்த முனைகிறது. சமூகத் தொடர்புக் கருவிகளின் உதவியையும் பயன்படுத்தி மீட்பின் செய்தியை அறிவிப் பதும், அக்கருவிகளைச் சரியாகப் பயன்படுத் துவது எவ்வாறு என்று படிப்பிப்பதும் தன் கடமை என்று திருச்சபை கருதுகிறது. (வ. ச. ஏ. ச தொ. கருவிகள் 1:3) தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டையும் அதன் விளைவுகளையும் தன் மக்களுக்கு எடுத் துரைக்கிறது. சமூகத் தொடர்புக் கருவி களுக்கென்று சங்க ஏட்டில் ஒரு தொகுப்பை வெளியிட்டிருப்பதிலிருந்தும், சமூகத் தொடர் புத் துறைக்கென்று அனைத்துலக மட்டத்தில் ஓர் அமைப்பை நிறுவியும், தொடர்பு நாளாக ஆண்டில் ஒரு நாளை அறிவித்து விழாவெடுப்பதிலிருந்தும் திருச்சபை இதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

ஒவ்வோர் ஆண்டும் தொடர்பு நாளுக் காக திருச்சபை ஒரு தலைப்பைக் கொடுப்பது வழக்கம். இவ்வாண்டுக்காக ''ஆவியால் ஊட் டம் பெற்று நம்பிக்கையைப் பரப்புவோம்'' என்னும் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

2000 மாம் ஜுபிலி ஆண்டுக்கு ஆயத்த மாக இவ்வாண்டை தூய ஆவியானவருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருப்பதன் பின்னணியில் தொடர்பு நாளுக்கான இத்தலைப்பு கொடுக் கப்பட்டுள்ளது.

ஆவியானவரால் ஊட்டம் பெற்ற இறை வாக்கினர்கள் இறைவனின் செய்தியை மக் கள் மத்தியிலே எடுத்துரைத்ததை விவிலியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே நாம் பரக்கக் காணமுடியும். (எசேக்கியேர் 2 : 2 - லூக் 2:67) இயேசுவினுடைய வாழ்வில் அவர் யோர்தான் நதிக்கரையில் திருமுழுக்குப் பெற்றபோது ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு இறையாட்சியை அறிவிக்கத் தொடங்கியதையும், வல்ல செயல்கள் புரிந்ததையும் நற்செய்தி ஏடுகள் நவில்கின்றன. (லூக் 3 : 22, 4 : 14) திருத்தூதர் பணியிலே இயேசுவின் சீடர்கள ஆவியானவர் இறங்கியபின் அடைபட்ட கதவுகள் திறந்து, அச்சம் நீங்கி உறுதியும் தெளிவும் பெற்று நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினர் என்றுகாணக்கிடக்கிறது. (தி. தூ.பணி 2:1-12)

விவிலியம் காட்டும் நிகழ்வுகளைப் பார்க்கின்ற போது தூய ஆவியைப் பெற்றவர்கள், ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் தங்கள் விசுவாசத்தை, இறைவனின் செய்தியை, உண்மையை அர்ப்பணிப்பும் தியாகமும் நிறைந்த நெஞ்சுடன் மக்களுக்கு அறிவித்ததைக் கண்டு கொள்ள முடிகிறது. ஆகவே இவ்வாண்டு தொடர்பு நாளுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு கிறீஸ்தவ தொடர்புத் துறையாளனுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான பண்புகளை ரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்புகிறது எனலாம்.

ஆவியானவரால் ஆட்கொள்ளப்படும் ஒரு கிறீஸ்தவத் தொடர்பாளன் செயற்படுபவனாக, இறை ஆட்சியை அறிவிப்பவனாக, தொடர்புப் பணியால் மானுடத்தை மேம்படுத்துபவனாக இருப்பான்

ஆவியானவரே ஒரு தொடர்பாளர். தந்தையாகிய இறைவனுக்கும் மகனாகிய இயேசுவுக்கும் இடையே உள்ள அன்புத் தொடர்பாக ஆவியானவரே விளங்குகிறார்.

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள தொடர்புக்கு அடிப்படையாகவும் ஆவியானவரே உள்ளார். தந்தையாகிய இறைவன் தம் ஆவியை ஊதி மனிதனுக்கு உயிர் கொடுத்தார். (தொ. நூல் 2:7) ஆவியினால் தான் இயேசு மூலமாக இறை மனிதத்தொடர்பு உருவானது. (மத் 2:18) இயேசு தமது ஆவியை மண்ணுலகுக்கு அருளியதன் மூலம் திருமுழுக்கின் போது நாம் ஆவியானவரை அடைவதன் மூலம் மானுடம் முழுவதுமே ஆவியில் தொடர்பு கொள்கிறது ஆகமூவொரு கடவுளும், கடவுளும் மனிதனும், மனிதனும் மனிதனும், படைப்புகள் அனைத்தும் ஒன்றிணைவது, தொடர்பால் இணைக்கப்படுவது தூய ஆவியினாலேதான். ஆகவே ஆவியானவரால் நிரப்பப்பெற்று, செபத்தில் நிலைத்து நிற்கும் ஆண்கள் பெண்களுமே கிறீஸ்தவத் தொடர்பாளர்களாகக் கடமையாற்ற கூடியும். இவர்களே படிப்படியாக இறைவனில் ஆழமாக ஒன்றித்து ஏனைய மனிதர்களுடன் தாம் கொள்ளும் உறவுகளிலே அதிகரித்த இயைபாக்கத்தைக் கிளர்ந்தெழச் செய்யும் தம் திறமையிலே வளர்ந்து வருவார்கள். (32 வது உ. தொ. நாள் செய்தி)

இன்றைய உலகில் ஒருவகையில் தூய ஆவியின் அடையாளமாக - நவீன தொடர்பு சாதனங்கள் திகழ்கின்றன. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதிலும், அறிவு, கலை, கலாசாரம், பண்பாடு போன்ற இன்னோரன்னவைகளை பகிர்ந்து கொள்வதிலும், உலக சமுதாயத்தை ஒரே குடும்பமாகக் கட்டி ஆள்வதிலும் தொடர்பு சாதனங்கள் ஆற்றல் பெற்று விளங்குகின்றன. தொடர்பு சாதனங்கள் முறையாகப் பயன்படுத்தப்பட்டால் மனித சமூகம் நீதியையும் பிறரன்பையும் அடிப்படையாகக் கொண்டதாக உருவாகி நிலைத்து நிற்க முடியும்; ஆனால் அனைத்தும் வணிக மயப்படுத்தப்பட்டுள்ள இன்றைய சமுதாய அமைப்பில் தொடர்பு சாதனங்கள் ஆக்கிரமிப்புக்கும் சுரண்டலுக்கும் துணை போகும் சாதனங்களாகவே கையாளப்படுகின்றன. இது திருச்சபைக்கும், கிறிஸ்தவத் தொடர்பாளனுக்கும் ஒரு சவாலாகும். நவீன தொடர்பு சாதனங்கள் உருவாக்கியுள்ள 'புது மொழி, புதுத்தொழில் நுட்பம், புது உளவியல் ஆகியவற்றை உள்ளடக்கும் புதிய பண்பாடு என்பதற்குள் கிறீஸ்துவின் நற்செய்தி இரண்டறக் கலக்க வேண்டியுள்ளது. இதற்கு புதிய அணுகு முறைகளும் வேலைத் திட்டங்களும் தேவை.

தொடர்பாளர்கள், குறிப்பாகக் கிறீஸ்தவத் தொடர்பாளர்கள் உலகில் காணப்படும் நம்பிக்கையின் அடையாளங்களைக் கண்டுணர்ந்து அவற்றில் காணப்படும் மனித மேம்பாட்டுக்குரிய அம்சங்களை வளர்ப்பதோடு, மானுடத்தைப் புதுப்பித்து நிறைவாக்கும் ஆவியானவரின் இடையறாத செயற்பாட்டில் தம்மையும் இணைத்துக் கொண்டு, இரண்டாயிரமாம் நூற்றாண்டின் நிறைவை நோக்கி நிற்கும் மானுடத்துக்கு நவீன தொடர்பூடகங்களுடாக ஆக்க பூர்வமான பணிகளாற்ற தம்மையே அர்ப்பணிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நூலகம்
நல்லூர் கிளை நூலகம்.

# விவிலிய - பொது அறிவுப் போட்டி - 28

1. தானியேல் கண்ட காட்சியின் பொருளை அவருக்கு விளக்கிய தேவதூதன் யார்?

2. "உன் கண்தான் உன் உடலுக்கு விளக்கு" என்று மத்தேயு நற்செய்தியில் எத்தனையாம் அதிகாரம், வசனத்தில் உள்ளது

3. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட 2ம் திருமுகத்தின் படி புனித சின்னப்பர் துரோவா ஊரிலிருந்து எந்த ஊருக்குச் சென்றார்?

4. கிறிக்கட் போட்டிகள் இடம் பெறும் "சார்ஜா" எந்த நாட்டில் உள்ளது?

5. இவ்வருடம் சித்திரையில், அறையப்பட்ட இயேசுவின் சிலுவையில் இருந்து இரத்தம் வருவதாக ஒரு பெண் இந்தியாவில் கண்டு கூறினார், அப்பெண்ணின் தொழில் எது?

6. கீதாஞ்சலி எனும் கவிதை இலக்கியத்தை உலகுக்கு கொடுத்தவங்கக் கவிஞர் யார்

பெயர்

முகவரி

இங்கே வெட்டவும்

போட்டி விதிகளில் மாற்றம் !

பரிசுகள் அதிகம் ! !

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 20 - 06 - 98
முகவரி : விவிலிய பொது - அறிவுப் போட்டி - 28

தொண்டன்,

அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய பொது அறிவுப் போட்டி - 26 விடைகள்

1) 25ம் அதிகாரம், 2) தலைமைக்குருக்களும் பரிசேயர்களும்
3) அப்பா தந்தை அடிமை அல்ல
4) இங்கிலாந்து (ஐக்கிய இராச்சியம்)
5) வரப்பிரகாஷ், துஸாராகெலும் 6) சீனா

பரிசு ரூபா 100/-

திருமதி. காமலிற்றா விமலதாஸ்
31, இராஜவரோதயம் வீதி,
திருகோணமலை.

ரூபா 75/-

இ. பிரதீஸ்குமார்
தெரேசாள் ஆலயம்,
வாழைச்சேனை.

ரூபா 50/-

றோஸ் மேரி குரூஸ்
றோசகம், 20 ஆலய வீதி,
மூதூர் - 3

ரூபா 25/-

நிரோஷினி மயில்வாகனம்
37, வன்னியார் ஒழுங்கை,
திருகோணமலை.

## செய்தித் தாள்களின் அடிப்படைத் தகைமைகள்

1) செய்திகளைத் தருவது
2) வழிகாட்டியாய் உதவுவது
3) செய்திகளின் பின்னணிகளை விளக்கிக் கட்டுரை யாகத் தருவது
4) மகிழ்விப்பது
5) மக்களுக்குத் தொண்டு செய்வது

"இதழியல்" ச. சிங்காரம் M. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகம் போற்றுதும்

ஊடகம் போற்றுதும் — வாகரை வாணன்
ஊடகம் போற்றுதும்

உன்னையும் என்னையும்
ஒட்ட வைக்கும் சமூக
ஊடகம் போற்றுதும்......

வானில் இருந்து வழியும்
ஒலி மழையில்
நானும் நீயும் நன்கு
நனையச் செய்திடும்

ஊடகம் போற்றுதும்
ஊடகம் போற்றுதும்

புலரும் காலையில்
நம்மைப் பார்த்துப்
புன்னகை செய்யும் பூ
புதினப் பத்திரிகை

ஊடகம் போற்றுதும்
ஊடகம் போற்றுதும்

காதோடு கதை பரிமாறும்
தொலைபேசி நமது தோழன்

ஊடகம் போற்றுதும்
ஊடகம் போற்றுதும்

காட்சிகள் ஆயிரம்
கண்களில் குவிக்கும்
ஆச்சரியத் தொலைக்காட்சி
அறிவியல் சாதனை

ஊடகம் போற்றுதும்
ஊடகம் போற்றுதும்

உலகத்தையே சிறு
ஊராக ஆக்கும்
இன்ரநெற் என்னும்

ஊடகம் போற்றுதும்
ஊடகம் போற்றுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Papar in Sri Lanka.*




## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள்  ஜூன் - 1998

நாள் : 2, 16, 30

நேரம் : மாலை 7.45 மணி

— சிறுவர் உலகம்

நாள் ; 14, 28,

நேரம் : மாலை 7.00 மணி

— புதிய உலகம்

நாள் : 6, 7, 8, 9, 10
11, 12, 20, 21
22, 23, 24, 25, 26

நேரம் : காலை 5.50 மணி

— கத்தோலிக்க நற்சிந்தனை

நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்

தொடர்பு அ. பெ. எண். 44
மட்டக்களப்பு

இச்சஞ்சிகை இலங்கை மட்டக்களப்பு [illegible] அவெனியூ 28ன் ஐடியல் (வளர்மதி) அச்சகத்தில் அச்சிட்டு, தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 26-05-98 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org